முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.01.2022, திங்கட்கிழமை

1. தருமத்தை கொண்டே உலகினை
தன்வசம் கொண்டு மீட்டிட
ஆறுமுக சக்தியாக வந்தநல்
அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் பிலவ சிலை திங்கள்
ஆசிபட இருபானாற்திகதி சோமவாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 26ம் நாள், 10.01.2022 திங்கட்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை முனையடுவார் நாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
பேசிட எங்கும் தருமபலம்
பெருகிட மக்களிடை தயவுநிலை
4. தயவுநிலை தானாகப்பெருகி
தரணியில் குற்றம் குறைவிலா
நேயமுள செயல் வடிவங்கள்
நிலைபெற்று மாற்றம் காணும்
5. காணுமே பசிபிணி விரட்டும்
கருணை எனும் மகா சக்தி
ஞானமாகப் பரவி உலகினில்
நன்னெறியாகத் தானாகவளரும்
6. வளர்க்கின்ற ஞானம் தரும்
வள்ளல் அரங்கன் ஆசியும்
தளர்விலா சன்மார்க்க நெறியும்
தரணியில் வேரூன்றி விடவே
7. ஆகவே அற்புதம் நடக்கும்
அகிலம் அழிவிலா மீளும்
மிகைபட ஞானவான் தருமவான் எனும்
மேலான மக்கள் சமூகம் பெருகி
8. பெருகியே உலகளவில் மாற்றம்
பெருமைபட எண்ணிக்கை கூட
வருமுலகில் உலகத் தலைமைகளை
வரலாற்றில் மாற்றும் சக்தியாக
9. ஆகவே ஞான சக்தி கொண்ட
ஆறுமுகனை வழிபாட்டின்வழி
மிகைபட ஏற்றவர்கள் மூலம்
முருகப்பெருமான் ஆசிபெற்ற

10. ஆசிபெற்ற தலைமை கொண்ட
அறிவிப்பேன் ஞான ஆட்சியாக
வாசிவென்றோர் முன்னின்றுமே
வழிநடத்தும் ஞானிகள் ஆட்சியாக

11. ஆகவே உலகம் மாற்றம் பெறும்
அரங்கமகா ஞானியர் வழி
யுகமாற்றமே இனிதே நடந்தேறும்
உரைத்திட துல்லிய ஆசிமுற்றே

–சுபம்–